
ஜூபிலி பிலிம்ஸ்
கல்கியின்
பார்த்திபன் கனவு
டைரக்ஷன்
யோகானந்த்

வள்ளுவரின் குறளை யும், கரிகாலச் சக்கர வர்த்தியின் வாளையும்-தான் விக்கிரமனுக்குத் தன் செல்வமாக விட்டுச் சென்ருன்.



பல்லவப் பேரரசின் அடிமைத் தளையிலிருந்து சோழ நாடு விடுபட்டு, மகோன்னதமாக விளங்க வேண்டும் என்று கனவு கண்டான் பார்த்திப மகாராஜா (அசோகன்)



பஞ்சத்தையும் படடினியை யும் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, குறுக்கு வழியில் பல்லவப் பேரரசை முறி [illegible]

கணவனுக்கு ஏற்ற பண்பு நிறைந்த மனைவியாக குறும் புத்தனமும் அதோடு சுதந் திரப் பற்றும் கொண்டு விளங்கும் ஆதர்ச குடும்ப விளக்கு வள்ளி — (ராகினி)




நாட்டுப் பற்றை சுய நலத் தீற்கு இரையாக்கி விட்டு, தன்னை வளர்த்த சோழ நாட்டுக்கே துரோகியாகி தன் தீவினையால் மடிந்த மாரப்பன் (பாலய்யா)





விடும் ஒவ்வொரு மூச்சிலும் சோழ நாட்டின் நலனைப் பேணி, தன் உயிரையும் மதிக்காமல் உழைத்த ராஜ விசுவாசி படகோட்டி பொன் னன்—(எஸ். வி. சுப்பய்யா)



யார் இந்த சிவனடியார்?' என்றகேள்வியை ஒவ்வொருவரிடமும் எழுப்பி விட்டு, தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றிய இணையற்ற கோமான் (ரங்கராவ்)



ஜுபிலி பிலிம்ஸ்

# பார்த்திபன் கனவு

★

நடிகர்கள் :

| | |
|---|---|
| விக்கிரமன் | ஜெமினி கணேசன் |
| மாமல்லர் | எஸ். வி. ரங்கராவ் |
| மாரப்பபூபதி | டி. எஸ். பாலையா |
| பொன்னன் | எஸ். வி. சுப்பையா |
| கபால பைரவன் | பி. எஸ். வீரப்பா |
| பார்த்திபன் | எஸ். ஏ. அசோகன் |
| சிறுத்தொண்டர் | ஜாவர் சீதாராமன் |
| மகேந்திரன் | பாலாஜி |
| குந்தவி | வைஜயந்திமாலா |
| வள்ளி | ராகினி |
| அருள்மொழி | கே. மாலதி |
| கமலி | பி. சரோஜாதேவி |
| சிவகாமி | கமலா லட்சுமணன் |

மற்றும்

| | |
|---|---|
| ஜி. பட்டு ஐயர் | (காலஞ் சென்ற) ஜி.எம். பஷீர் |
| பி. எஸ். வெங்கடாசலம் | பொட்டை கிருஷ்ணமூர்த்தி |
| டி. வி. சிவானந்தம் | எம். கிருஷ்ணமூர்த்தி |
| மாஸ்டர் அனந்தராமன் | ஜெமினி சம்பத் |
| கே. ஜி. அர்ச்சுனன் | சி. ஆர். சந்தர் |
| இலையூர் தியாகராஜன் | சுப்ரமணியன், மணவாளன் |
| ராதாபாய் | இந்திரா |
| சகுந்தலா | இந்திராணி ஜான் |

ஜுபிலி பிலிம்ஸ்: பார்த்திபன் கனவு

நடன நடிகைகள்: ஜயந்தி, கமலா, ஜோதி, மோகனு, கே. எல். கமலா, ஜி. கமலா, சந்திரா, ராஜம், சாந்தி, ரத்ன குமாரி, லீலா.

பின்னணி பாடியவர்கள்: எம். எல். வசந்தகுமாரி, பி. சுசீலா, பி. லீலா, ஜமுனாராணி, ஏ. எம். ராஜா.

திரைக்கதை, வசனம்:
**விந்தன்**

இசை:
**வேதா**

கலை அமைப்பு, உடை ஓவியம்:
**மணியம்**

ஒளிப்பதிவு டைரக்ஷன்:
**செல்வராஜ்**

பாடல்கள்:
**கவிஞர் கண்ணதாசன், விந்தன், மருதகாசி**

அஸோஸியேட் டைரக்ஷன்:
**எம். கே. ராஜேந்திரன்**

டைரக்ஷன்:
# யோகானந்த்

தயாரிப்பு:
# V. கோவிந்தராஜன்

ஜூபிலி பிலிம்ஸ்

# பார்த்திபன் கனவு

## பாடல்கள்

**1**

இயற்றியவர்:
மருதகாசி

பாடியவர்கள்:
பி. சுசீலா, ஏ. எம். ராஜா

குந்தவி: கண்ணாலே நான் கண்ட கணமே - உயிர்க்
காதல் கொண்டதென் மனமே - இது
முன்னாளில் உண்டான உறவோ - இதன்
முடிவும் எங்கோ எதுவோ

[கண்ணாலே...

விக்கிரமன்: எண்ணாத இன்பம் பெண்ணாக வந்து
என்னோடு வாவென்று சொல்லுதே - இது
முன்னாளில் உண்டான உறவோ - இதன்
முடிவும் எங்கோ எதுவோ

[கண்ணாலே...

குந்தவி: யாரென்று கேட்காததேனோ
யாரானால் என்னென்றுதானோ
நேராக நின்று யாரென்று கேட்டால்
கூரான வேல் பாயும் என்றோ

விக்கிரமன் : யாரான போதென்ன கண்ணே
நானுண்ணும் ஆனந்தத் தேனே
நீவேறு அல்ல நான்வேறு அல்ல
வேறென்ன நானின்னும் சொல்ல - இனி
என்னாளும் நீ இங்கு எனக்கே

குந்தவி : என் இதயமெல்லாம் உமக்கே

விக்கிரமன் : கண்ணாலே நான் கண்ட கணமே - உயிர்க்
காதல் கொண்டதென் மனமே

குந்தவி : இது முன் ஜென்மத்தில் உண்டான உறவோ
இதன் முடிவும் எங்கோ எதுவோ

இருவரும் : கண்ணாலே நான்கண்ட கணமே - உயிர்க்
காதல் கொண்டதென் மனமே...

2

இயற்றியவர் :
"விந்தன்"

பாடியவர்கள் :
பி. சுசீலா ஏ. எம். ராஜா

குந்தவி : இதய வானின் உதய நிலவே
எங்கே போகிறாய் — நீ எங்கே போகிறாய்...?

ஒளியில்லாத உலகம் போல
உள்ளம் இருளுதே — என் உள்ளம் இருளுதே

கண்கள் செய்த பாவம் உன்னைக்
கண்டும் காணாதேங்குதே
கண்டும் காணாதேங்குதே!

பாய் விரித்துக் கப்பல் செல்ல
பாவிநெஞ்சம் துடிக்குதே
பாவிநெஞ்சம் துடிக்குதே!

[இதய வானின்...

**விக்கிரமன் :** இருளகற்றும் ஒளியென்றென்னை
எண்ணும் நீயாரோ
எண்ணும் நீயாரோ

கண்டும் காணாதேங்கும் கண்கள்
காதல் கண்களோ
காதல் கண்களோ!

இதய வானின் உதய நிலவே
எங்கே போகிறேன் — நான்
எங்கே போகிறேன்...

**குந்தவி :** ஆசை மிஞ்சி நேசக் கரங்கள்
அணைக்க உன்னை நீளுதே
அணைக்க உன்னை நீளுதே

பறந்து வந்து உன்னைத் தழுவ
பாழும் சிறகு இல்லையே
பாழும் சிறகு இல்லையே

[இதய வானின்...

3

இயற்றிவர் :
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர்கள் :
ஜமுனாராணி குழுவினர்

எங்கள் குல சமுதாயம் ஏற்றமுற வருக
திங்கள் என இருள்நீக்கும் செல்வமே வருக
மங்கையரின் குலதருமம் மாட்சியுற வருக
மன்னவர்க்கும் மன்னவராய் மாண்புபெற வருக
தென்னவரே மன்னவரே என்னவரே வருக
தீவிலுள்ள செந்தமிழர் வாழ்த்துகிறோம் ஐயா!...
வாழ்த்துகிறோம், ஐயா!...
வாழ்த்துகிறோம், ஐயா!

இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்

பாடியவர்கள்: ஜமுனாராணி குழுவினர்

மல்லிகைப் பூ மருக்கொழுந்து
மலர்ந்த செண்பகம் ரோஜா—தேன்
மணக்கும் செண்பகத் தீவினுக்கிந்த
வாலிபர் தானடி ராஜா!

காவிரிக் கரையின் செல்வனடி—போர்(க்)
களங்கள் கண்ட மன்னனடி
பூவிரித்த தீவினில் வந்து
புதுமை செய்த வீரனடி!

[மல்லிகைப் பூ...

ஆத்தி மாலை கொண்டவராம்
அன்பால் உலகை வென்றவராம்—நம்
கடலில் கிடைத்த கருணை வடிவம்
கனிந்த உள்ளம் கொண்டவராம்!

[மல்லிகைப் பூ...

வள்ளுவன் குறளைக் கூறிடுவோம்—நம்
மன்னவர் வாழ்கெனப் பாடிடுவோம்
தெள்ளு தமிழ்க் குலப் பிள்ளைகளெல்லாம்
சேர்ந்தே ஒன்றாய் ஆடிடுவோம்!

[மல்லிகைப் பூ...

இயற்றியவர் :
"விந்தன்"

பாடியவர் :
எம். எல். வசந்தகுமாரி

(சிவகாமியின் சபதம்)

1

பல்லவி

அந்தி மயங்குதடி ஆசை பெருகுதடி
கந்தன் வரக் காணேனே - மயிலே
[அந்தி மயங்குதடி...
வன்ன மயிலே
வன்ன மயிலே!

அனுபல்லவி

ஏக்கத்தால் படிந்துவிட்ட
தூக்கமில்லாத் துன்பத்தை
ஒத்தி எடுத்திடவே - மயிலே
உதடவரைத் தேடுதடி!
[அந்தி மயங்குதடி...
வன்ன மயிலே
வன்ன மயிலே!

சரணம்

தாகத்தால் நா வரண்டால்
தண்ணீரால் தணியுமடி
இதயம் வரண்டு விட்டால்
எதைக்கொண்டு தணிப்பதடி
கள்ளச் சிரிப்பால் என்
கன்னத்தைக் கிள்ளிவிட்டு
அள்ளி அணைத்திடவே - மயிலே
அவர் வரக் காணேனடி
[அந்தி மயங்குதடி :
வன்ன மயிலே
வன்ன மயிலே!

6

இயற்றியவர் :
அப்பர் பெருமான்

பாடியவர் :
எம். எல். வசந்தகுமாரி

(சிவகாமியின் சபதம்)
2

வடிவேறு திரி சூலம்
தோன்றும் தோன்றும்
வளர் சடைமேல் இளமதியம்
தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ் கொன்றைக்
கண்ணி தோன்றும்
காதில் வெண் குழைதோடு
கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுருவைப்
போர்வை தோன்றும்
எழில் திகழும் திரு முடியும்
இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி
பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் பூவணத்தெம்
புனிதனுர்க்கே !

(தேவாரம்)

7

இயற்றியவர் :
அப்பர் பெருமான்

பாடியவர் :
எம். எல். வசந்தகுமாரி

(சிவகாமியின் சபதம்)
3

முன்னம் அவனுடைய
நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும்
வண்ணம் கேட்டாள்
பின்னே அவனுடைய
ஆரூர் கேட்டாள்
பெம்மான் அவனுக்கே
பிச்சியானுள் [முன்னம்...

அன்னையையும் அத்தனையும்
அன்றே நீத்தாள்
அகன்றூர் அகலிடத்தார்
ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்
நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை
தலைவன் தாளே...!

(தேவாரப்

8

இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்

பாடியவர்: பி. சுசீலா, ஏ. எம். ராஜா

குந்தவி: பழகும் தமிழே பார்த்திபன் மகனே
அழகிய மேனி (சுகமா) சுகமா?

விக்கிரமன்: பாவலன் கவியே பல்லவன் மகளே
காவலன் மேனி சுகமே - உன்
கைகளினால் வந்த குணமே

குந்தவி: வேலாலெறிந்து வெல்லும் - உங்கள்
வீரமும் காதல் சொல்லும்

விக்கிரமன்: பால்போல் தெளிந்த முகமும் - நான்
பார்த்ததும் ஆசையில் துள்ளும்

குந்தவி: சித்திர வடிவம்போல - தங்கச்
சிலையைக் கண்டதினாலே

விக்கிரமன்: நித்திரை தீர்ந்தது கனியே - உன்
நினைவில் மீண்டது மனமே

குந்தவி: உங்கள் அழகிய மேனி சுகமா?

விக்கிரமன்: உன் காவலன் மேனி சுகமே!

குந்தவி: } பழகும் தமிழே......

விக்கிரமன்: } பாவலன் கவியே......

குந்தவி : வளரும் காதலின் எல்லை

விக்கிரமன் : இதை மறுப்பவர் யாரும் இல்லை

குந்தவி : மலரும் காதல் மலரும்


விக்கிரமன் : நம் வாழ்வினில் அமைதி நிலவும்

குந்தவி : உங்கள் அழகிய மேனி சுகமா ?

விக்கிரமன் : உன் காவலன் மேனி சுகமே !

குந்தவி : } பழகும் தமிழே......

விக்கிரமன் : } பாவலன் கவியே......



இப்படத்தின் பாடல்களை

**கொலம்பியா, எச். எம். வி.**

இசைத்தட்டுகளில் கேளுங்கள்.

ஜூபிலி பிலிம்ஸ்: பார்த்திபன் கனவு

## ஸ்டுடியோ: கோல்டன்

| | | |
|---|---|---|
| இசை ஒலிப்பதிவு: | ... | முகுல்போஸ் [ஏ.வி.எம்.] |
| உதவி: | ... | கே. சம்பத் |
| வசனம் ஒலிப்பதிவு: | ... | எம். எஸ். நாகேஸ்வரன் |
| உதவி: | | ராமச்சந்திரப்பா |
| | | ராமலிங்கம் |
| | | மாசிலாமணி |
| | | கோவிந்தராஜ் |
| ஒளிப்பதிவு: | ... | பாச்க, கே. கே. மேனன் |
| உதவி: | ... | டி. ஜி. வடிவேலு |
| | | சுந்தர் |
| | | ஜி. தனபால் |
| உதவி டைரக்டர்கள்: | ... | பழநி ஆர். ராஜன் |
| | | பின்னலூர் சிவானந்தன் |
| | | ராமகிருஷ்ணு |
| இசை அமைப்பு (உதவி): | ... | ஜி. தனராஜ் |
| | | எம். லூயிஸ் |
| காட்சித்தொகுப்பு: | ... | வீ. பி. நடராஜன் |
| | | பழநி ஆர். ராஜன் |
| ஒப்பனை, சிகை அலங்காரம்: | ... | நாஞ்சில் சிவராம் |
| | | எஸ். செல்லப்பா |
| | | தனகோடி |
| | | ஏ. பெரியசாமி |
| உதவி: | ... | பாப்ஜி |
| | | நாஞ்சில் கிருஷ்ணன் |
| | | சேகர் |
| நடன ஆசிரியர்கள்: | ... | காஞ்சிபுரம் ஜி. எல்லப்பா |
| | | வைதீஸ்வரன்கோவில் |
| | | முத்துசாமிப்பிள்ளை |
| ஆடை அலங்காரம்: | ... | சி. கே. கண்ணன் |
| | | டி. ராஜு |
| உதவி: | ... | டி. நடராஜன் |



மாமல்லரின் திருமகள் குந்தவியின் கருவிழிகளிலுள்ள காந்த சக்தியினால் கவரப்பட்ட விக்ரமன் காதலுக்கும், வீரத்துக்குமிடையே சிக்கித் தவித்தான். முடிவில் காதலும் வீரமும் வெற்றிபெறக் காரணமாயிருந்தவர் அந்தச் சிவனடியார்தான்.

